**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.06.2025**
**OS. No. 229/2013**
**வழக்கு சாட்சி PW.2–கோசலை, க/பெ.மாரியப்பன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி குருசாமிக்கு நான் உடன் பிறந்த சகோதரி இல்லை என்றால் சரிதான். நான் அப்பு என்பவருக்கு உடன்பிறந்த தங்கை என்றால் சரிதான். வாதி குருசாமியின் சித்தப்பா மகள் நான் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி சுமார் 50 வருடம் இருக்கும், இந்த 50 வருடங்கள் நான் கொளத்தூரிலுள்ள அம்பேத்கர் நகரில் என் கணவர் மாரியப்பனுடன் வசித்து வருகிறேன். வாதி குருசாமி அவர்களின் தந்தை குப்பன் அவர்களின் முதல் மனைவி பெயர் சௌந்தர்யா என்றால் சரிதான். மேற்கண்ட சௌந்தர்யா உயிருடன் இருக்கும் போதே அவர்களுக்குள் குழந்தை இல்லை என்பதால் குருசாமியின் தாயாரான பாப்பா என்பவரை குப்பன் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

2) மேற்கண்ட சௌந்தர்யா அவர்கள் குப்பன் மற்றும் பாப்பா இறந்த பிறகு தான் இறந்துபோனார் என்றால் சரிதான். சௌந்தர்யா அவர்களின் நேரடி வாரிசு வாதி குருசாமி இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டா சௌந்தர்யா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா எவ்வாறு வாதி குருசாமி பெயருக்கு மாறியது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி எந்த சர்வே எண்ணிலுள்ள சொத்திற்கு, எவ்வளவு விஸ்தீரணத்திற்கு, என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) புளிக்கார் மணி என்பவர் தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்தை யாரிடமிருந்து எந்த வருடம், எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றோ, அந்த சொத்தின்

சர்வே எண் குறித்தோ எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அந்த சொத்தை புளிக்கார் மணி வாதியின் தந்தை பொன்னுசாமி மற்றும் பாப்பா ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார். நான் சொல்வது தவறானது என்றும், 1988ம் வருடம் ஜீவா என்பவரிடமிருந்து தான் கிரையம் பெற்றார் என்றால் சரிதான், ஜீவா தான் மேற்கண்ட பொன்னுசாமியின் மகன் ஆவார்.

4) என் சகோதரர் அப்பு கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக வருவாய் துறையில் நீண்ட காலம் கொளத்தூர் கிராமத்தில் பணி செய்து, ஓய்வு பெற்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். புளிக்கார் மணி என் சகோதரர் அப்பபு மீது வருவாய் துறையில் ஒரு புாகர் கொடுத்து அந்த புகாரின் மிது விசாரணை நடத்தி நில திட்ட உதவி அலுவலர் முன்பு நத்தம் மேல் முறையீடு வழக்கு நடைபெற்றது என்றும், அதில் 21.07.1997ல் என் சகோதரர் அப்பு அவர்கள் புளிக்கார் மணி கிரையம் வாங்கி யசொத்தில் 70 சதுரடி அளவை ஆக்கிரமித்து அப்பு பெயரில் பட்டா வாங்கியதை ரத்து செய்து, அப்பு பெயரிலுள்ள ச.எண்.315/10ன் பட்டாவை ரத்து செய்து, புளிக்கார் மணி அவர்களின் ச.எண்.315/9 ஐ சேர்த்து புளிக்கார் மணி பெயரில் பட்டா வழங்க உத்தரவாகி பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் மீது என் சகோதரர் மேல்முறையீடு எதுவும் செய்யாததால், அந்த உத்தரவு இறுதியானது என்றால் என் சகோதரரை மேல்முறையீடு செய்ய கூடாது என்று வருவாய் துறையில் மிரட்டினார்கள்.

5) புளிக்கார் மணி அவர்களிடம் இருந்து தான் நல்லதம்பி கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் இல்லை. நான் அறிந்து கொண்டேன். நல்லதம்பி கிரையம் வாங்கியதாக நான் சொல்வது தவறு என்றும், நல்லதம்யின் மகன் கலைவாணன் தான் புளிக்கார் மணியிடம் 09.09.2011ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கும், என் சகோதரர் அப்புவிற்கும் குடும்ப சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றும், இது தொடர்பாக என் சகோரதரர் அப்பு மேட்டுர் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் குற்ற வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு அது தற்போதும் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான்.

6) மேலும் இது தொடர்பாக மாண்பமை மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். என் சகோதரர் அப்பு இறந்த பிறகு அவரது வாரிசுகள் அந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என் தம்பி வாதி குருசாமி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி குருசாமி என் சகோதரர் அப்பு மீது இதே வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனக்கும், என் சகோதரர் அப்பு மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் விரோதம் இருப்பதால் வாதி குருசாமி சொல்லி அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) புளிக்கார் மணி மற்றும் அவரிடமிருந்து கிரையம் வாங்கிய 2ம் பிரதிவாதி கலைவாணனும் குருசாமி நிலத்தை ஆக்கிரமித்து எவ்வித கட்டிடமும் கட்டவில்லை என்றும், அவர்களது நிலத்திற்குள் தான் கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல, 1–1/2 அடி சேர்த்துதான் கட்டியுள்ளார்கள் கொளத்தூர் பேரூராட்சி ரெக்கார்டுகளில் சேனிட்டரி சந்து என்று வகைபாடு செய்யப்பட்ட இடத்தை தான் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து விட்டதாக வாதி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவ்வாறு சேனிட்டரி சந்து என்று எதுவும் இல்லை.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.